**எம்பிலிபிட்டிய பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

**-----------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை நவம்பர் 13 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது கைதவிர்க்கப்பட்ட டபிள் கப் வண்டியின் கிரயமான ரூபா 1,250,000 தொகையான சொத்துக்கள் கணக்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிவாக அதன் விற்பனைப் பெறுமதியான ரூபா 1,230,000 செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் படி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் பெறுமதி ரூபா 20,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) 09 கணக்கு விடயங்களுக்குரிய 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளினதும் உபயோகப் பதிவேடுகளின் படியான மீதிகளினதும் வேறுபாடு ரூபா 552,889 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் ஊழியர்களின் பிணை முதலீடு ரூபா 341,142 தொகையானதுடன் ஊழியர் பிணை வைப்பு மீதி ரூபா 447,119 தொகையானமையால் மீதிகளுக்கிடையே ரூபா 105,977 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2) | 1986 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 1,984,402 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரை மீள தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 2011 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா 5,465,459 தொகையான வைப்பு மீதி வைப்புக்களாக தொடர்ந்து வைக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,742,736 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,875,311 ஆக இருந்தது.

.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 455 | 455 | 2,739 |
| வாடகை | 6,216 | 7,282 | 275 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 911 | 546 | - |
| ஏனைய வருமானம் | 3,702 | 4,302 | 4,600 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

---

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்துடன் சேகரிக்கப்பட்ட வருமானத்தை ஒப்பீடு செய்த போது வீதவரி, ஆணைச்சீட்டுக் கட்டணம், ஏனைய வருமானங்கள் மற்றும் ஏனைய மானியங்களின் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முறையே 27 சதவீதம், 39 சதவீதம் 92 சதவீதம் மற்றும் 60 சதவீதமான குறைவைக் காண்பித்தது.

### 2.2.3 பிரசார அறிவித்தல் பலகைக் கட்டணம்

---

சபையால் 1999 ஒக்டோபர் 08 ஆம் திகதி ஏற்கப்பட்டிருந்த உள்ளூராட்சி நிறுவகங்களின் அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் பிரகாரமும் 2014 செப்தெம்பர் 26 ஆம் திகதிய பொதுக் கூட்டத்தின் 05(15) IV ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தப்படுவதற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணத்தின் படி 2014 ஆம் ஆண்டின் போது 12 அறிவித்தல் பலகைகளுக்கான கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல் பலகைகள் தொடர்பாக சதுர அளவு, உள்ள இடம் போன்ற தகவல்கள் தகவல்கள் அடங்கிய விபரமான ஓர் பதிவேடும் சபையிடம் இருக்கவில்லை. சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வியாபார இடங்களில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அறிவித்தல் பலகைகளுக்கு மேலதிகமாக பல்வேறு பிரசாரப் பலகைகளிலிருந்து கட்டணம் அறவிடப்படும் செயற்பாடு சபையிடம் இருக்கவில்லை.

### 2.2.4 நீர்க் கட்டணம்

--------------------

சபையால் செயற்படுத்தப்படும் 02 நீர்ச் செயற்திட்டங்கள் தொடர்பாக 423 நீர்ப் பாவனையாளர்களுக்குரிய பல வருட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட நீர்க் கட்டணம் ரூபா 1,742,254 தொகையான பணம் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கிருந்தது.

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

-------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஒக்தோபர் மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை எம்பிலிபிட்டி நீதவான் நீதிமன்றம் மூலம் கிடைக்கவேண்டிய தண்டப் பணத்திற்கு உரித்தான பட்டோலைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஏப்ரல் மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை சபைக்குக் கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்ட முத்திரைக் கட்டண அளவிற்கு உரித்தான துணைப் பதிவேட்டைத் தருவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 தொலைபேசிக் கோபுரக் கட்டணம்**

-----------------------------------------------------

இலங்கைக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் படி தொலைபேசி மற்றும் மின்சார ஒழுங்குபடுத்தல் கோபுர நிர்மாணிப்புகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட தொலைபேசி மற்றும் பரிமாற்று கோபுரங்களுக்கான அங்கீகாரம் வழங்கப்படுகையில் முறையான நடைமுறைகளின் படி கட்டண அறவீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

----------------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---------------------------------------------------------

(அ) மோட்டார் கிரேடர், பதனீட்டு இயந்திரம் மற்றும் டிபர் இயந்திரம் போன்ற வாகனங்கள்.: இயந்திரங்கள் உண்மையாக வேலை செய்த மணித்தியாலங்கள் கணிப்பிடப்பட்டு நிர்ணயிக்கப்படுவதற்காக நிலையான நடைமுறைகள் இருக்கவில்லை. இவ் வாகனங்கள்/ இயந்திரங்களை வெளியில் கொண்டு செல்கையில் எவ்வகையிலும் வாய்மொழி மூல அங்கீகாரத்தில் மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் முறையான அங்கீகாரம் வழங்கப்படுவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இதன் படி, இவ் வாகனங்கள்/ இயந்திரங்கள் இயங்கிய உண்மையான மணித்தியாலங்களை உறுதிப்படுத்துவதற்கும் பெறவேண்டிய உண்மையான வருமானத்தை சபை பெற்றுக்கொண்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கும் சபைக்கு இயலுமை இல்லாமை கண்டறியப்பட்டது.

**3.2 வாகனக் கட்டுப்பாடு**

-----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் ஒவ்வொரு வாகனம் தொடர்பான பொறுப்பு பொருட் பதிவுடன் எழுத்து மூலம் சாரதிக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் வாகனத்திற்காக எரிபொருள் வழங்கப்படுகையில் வழங்கப்படும் எரிபொருளின் அளவு நாளாந்த ஓட்ட அட்டவணைகளுக்கு உள்ளடக்கப்பட்டதாகக் குறிப்பொன்று எரிபொருள் பட்டியலில் பதியப்பட்டிருக்கவில்லை.

(இ) வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தின் போது அல்லது பின்னர் பொருத்தப்பட்ட உதிரிப்பாகங்களும் உபகரணங்களும் தொடர்பாக போதிய விபரம் உள்ளடக்கப்பட்ட பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்கு 2014 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட மேற்குறித்த டிப்பர் வாகனம் 2015 மார்ச் 30 ஆம் திகதி வரையிலும் பதிவு செய்யப்பட்டிராததுடன் சபையின் தேவைப்பாடுகளுக்குக் கிடைக்கப்பெறாது சாரதிகள் இன்மையால் பயனுள்ள செயற்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 அதிகாரப்பொறுப்பற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------------------------

2014 நவம்பர் 17 ஆம் திகதிய சபைத் தீர்மான இல. 29 மற்றும் 2014 செப்தெம்பர் 26 ஆம் திகதிய சபைத் தீர்மான இல. 14 இன் மூலம் நிலுவையான வீதவரித் தொகையான ரூபா 78,332 தொகை திரண்ட நிதியத்திற்கு பதிவளிக்கப்பட்டிருந்தது. ரூபா 50 இற்கு மேற்பட்ட பணத்தைத்

தவிர்ந்தவற்றைக் கைவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 182 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த சபை அங்கீகாரம் அமைச்சரின் அங்கீகாரத்தில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காசாளரின் பெறுவனவுகள் தொடர்பான நாளாந்த பதிவுப் புத்தகம், நாளாந்த கொடுக்கல்வாங்கற் பதிவேட்டுடன் பரீட்சிக்கப்படுவது தொடர்பான பொறுப்பு பிரதான முகாமைத்துவ உதவி உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அச் செயற்பாடு முறையான வகையில் மேற்கொள்ளப்பட்டிராமை கண்டறியப்பட்டது. கூடிய கவனத்துடனும் அவதானிப்புடனும் தொடர்ந்து பின்தொடர் நடவடிக்கைகளுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய காசாளரின் கடமைகள் தொடர்பில் நிலவும் இம் முறையற்ற நிலை தொடர்பாக கடந்த ஆண்டில் கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அது சீராக்கப்பட்டிராமையால் இக் கடமைகளுக்கு உரித்தான தவறுகளும் மோசடிகளும் நேர்வதற்குள்ள சந்தர்ப்பம் கணக்காய்விற்கு எவ்வகையிலும் தவிர்க்கப்பட முடியாததாகும்.

(ஆ) சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கிருந்த ரூபா 64,173 தொகையான நிலுவைக் கடன் மீதி மீள அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 679,400 பெறுமதியான தெரு விளக்குகளும் உபகரணங்களும் தலைவரின் கோரல்கள் மற்றும் சபை அங்கீகாரத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் தேவைப்பாடு குறித்து தொழில்நுட்ப உத்தியோகத்தரின் முன்னங்கீகாரம், தெரு விளக்குகள் பொருத்தப்படுவதற்காக இலங்கை மின்சார சபையுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்பாடுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தெரு விளக்குகளுக்கான பதிவேடொன்று பேணப்பட்டிராததுடன் தெரு

விளக்குகளைப் பராமரிப்பது தொடர்பாக நேரடிக் கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) போகஹ துணை வீதி கொங்கிரீட் இடல்

- சபரகமுவ மாகாண சபையின் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட இத் துறைக்காக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1,423,000 தொகையான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 03 மாத கால எல்லைக்குள் மேற்கொள்ளப்படுவதற்காக கரந்த கெட்டிய கமநல அபிவிருத்திச் சங்கத்துடன் ரூபா 1,401,973 பெறுமதியான ஓர் உடன்படிக்கை 2014 ஒக்டோபர் 02 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

- மதிப்பீட்டின் வேலை விடய இல. 02 இன் படி, 1:2:4 கொங்கிரீட் கலவை 85.73 மீட்டர் கியூப் இடப்படுவதற்குப் பதிலாக ரூபா 1,232,857 தொகை தர நிர்ணய அறிக்கை பெற்றுக்கொள்ளப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 ஏப்ரல் மாதம் வீதி பௌதீக ரீதியாக 02 இடங்களில் அகழப்படுகையில் பயன்படுத்தப்பட்ட கொங்கிரீட் கலவை மிகவும் எளிதில் உடைந்து போவது அவதானிக்கப்பட்டது. இதன் படி, இவ் வேலை விடயத்திற்காகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,232,857 தொகை தரமின்றி மேற்கொள்ளப்பட்ட வேலைக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவென்பது அவதானிக்கப்பட்டது.

### (ஆ) எரடுமன்டிஹேன பாலம் நிர்மாணிப்பு

- சபரகமுவ மாகாண சபையின் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட இத்

துறைக்காக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 995,459 தொகையான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 03 மாத கால எல்லைக்குள் மேற்கொள்ளப்படுவதற்காக கரந்த கெட்டிய கமநல அபிவிருத்திச் சங்கத்துடன் ரூபா 980,747 பெறுமதியான ஓர் உடன்படிக்கை 2014 செப்தெம்பர் 11 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. இப் பாலத்தின் இரு மருங்கிலும் பயன்படுத்தப்பட்ட பாதம் மற்றும் கற்சுவர்கள் முறையான தரத்தின் படி நிர்மாணிக்கப்பட்டிராமையால் நிர்மாணிக்கப்பட்டு 1 ½ மாதங்களின் பின்னர் ஏற்பட்ட மழையின் போது கழுவிச் செல்லப்பட்டிருந்தமையால் அணைக்கட்டு உடைந்து பாலத்தின் கொங்கிரீட் படை நீர் வழியே உடைந்து வீழ்ந்திருந்தமை 2015 ஏப்ரல் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்டது. இதன் படி, இச் செயற்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட மொத்த பணமும் எவ்வித நலனும் கிடைக்காது தோல்வியான செயற்திட்டத்திற்காக ஏற்கப்பட்ட பயனற்ற ஓர் செலவினமாகக் காணப்பட்டது.

**(இ) இங்கினிகஹகொட ஏரி வீதி செம்மண் இடப்பட்டு வீதி அபிவிருத்தி செய்தல்**

---

- சபரகமுவ மாகாண சபையின் தலைமை அமைச்சின் ஏற்பாட்டில் “ வாசலுக்கு வாசல் கிராமத்திற்கு கிராமம்” கிராமத்திற்குச் செல்லும் வீதி அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட இத் துறைக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 980,935 தொகையான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 03 மாத கால எல்லைக்குள் மேற்கொள்ளப்படுவதற்காக கரந்தகெட்டிய கமநல அமைப்புடன் ரூபா 966,438 பெறுமதியான ஓர் உடன்படிக்கை 2014 செப்தெம்பர் 12 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

- மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டவாறு 10 தொன்களாலான வீதிப் பதனீட்டு இயந்திரத்தின் மூலம் முறையான வகையில் பதனிடப்படாது, வீதியில் எருமைகள் சென்றமையால் இவ் வீதி அபிவிருத்தி செய்து மிகக் குறுகிய காலத்தில் ஏற்பட்ட மழைக்காலப்பகுதியின் போது ஏற்பட்ட பாரிய நீர் பாய்ச்சல் வீதியில் அடித்துச் சென்ற காரணத்தால் வீதியில் இடப்பட்ட செம்மண் பாரிய அரிப்பிற்கு உட்பட்டிருந்தமை 2015 ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்டது. இதன் படி, இத் துறைக்காகச்

செலவிடப்பட்ட ரூபா 849,439 தொகையான மொத்தப் பணமும் எவ்வித நலனும் பெறப்படாது விளைவற்ற செலவினமாகியிருந்தது.

**(ஈ) செம்மண் இடப்பட்டு வீதி அபிவிருத்தி செய்யப்படல்**

---

- மதிப்பீட்டு வேலைப் பெறுமதி ரூபா 3,194,822 தொகையான பிரதேச சபை நிதியம் மற்றும் தலைமை அமைச்சின் ஏற்பாட்டுத் தொகையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட 05 வீதிகள் தொடர்பாக முறையான வீதிப் பதனீடு மேற்கொள்ளப்படாது, இரு மருங்கிலும் கால்வாய்கள் முறைப்படி இடப்படாது, குறித்த தரத்தில் அல்லாது மண் இடப்பட்டமை போன்ற விடயங்கள் காரணமாக செம்மண் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட வீதி கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 ஏப்ரல் மாதம் அளவிலும் உடைந்த நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. குறிப்பாகப் பயன்படுத்தப்பட்ட செம்மண்களின் தரம் குறித்து எவ்வித சான்றுறுதியும், தர ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிராமையால் செம்மண்ணிற்குப் பதிலாக கழிவு கலக்கப்பட்ட மண் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக மழைகாலத்தின் பின்னர் வீதியின் பல பகுதிகளில் சேறு உருவாகி பயணிக்க முடியாத வகையில் உடைந்து காணப்பட்டது. வீதி எல்லைகளைத் தீர்க்காது போதிய நிலம் இல்லாத காரணத்தால் இரு மருங்கிலும் கால்வாய்கள் இன்மையால் மழை நீர் வீதியில் வளிந்தோடியமையால் இடப்பட்ட செம்மண் கழுவிச் செல்லப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---

சபை எல்லைக்குள் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை அகற்றும் அம்பிலிப்பிட்டிய நகர சபையுடன் ஒன்றிணைந்து கந்துருகஸ்ஆர பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், அம்பிலிப்பிட்டிய நகர சபையில் கழிவுப் பொருள் மீள்சுழற்சி செயற்திட்டம் தற்போது செயற்பாட்டில் இன்மையால் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் திறந்த வெளியில் மாத்திரம் கொட்டப்படுகின்றது. அக் கழிவுப் பொருட்கள் மீள்சுழற்சிச் செயற்திட்டம் மீள செயற்படுத்தப்படுவது தொடர்ந்து தாமதமாகுவதுடன் ஆகையால் அகற்றப்படும் கழிவுப் பொருட்கள், மழைகாலப்பகுதியின் போது

அண்மையில் உள்ள சந்திரிகா குளத்திற்கு கழுவிச் செல்லும் அபாயம் நிலவுவது கண்டறியப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

(அ) போதிய திட்டத்துடன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிராத காரணத்தால் 06 செலவின விடயங்கள் தொடர்பான ஏற்பாடு வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டு வேறு செலவின விடயங்களிலிருந்து ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 1,121,468 தொகையான சேமிப்புகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) 03 செலவின விடயங்கள் தொடர்பாக ரூபா 2,411,900 தொகையான ஏற்பாடு வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 2,799,540 தொகையான குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் மீள அச் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பேணப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) திண்மக் கழிவு முகாமைத்துவம்